பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564,566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-2751)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 17 சனிக்கிழமை (3-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 327

### அரசின் சமாதானக் கதவு திறந்தே உள்ளது

# புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு
# ஐ.தே.க.விதிக்கும் நிபந்தனை என்ன

## தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி



(அனுராதபுரத்திலிருந்து நமது நிருபர்)

பயங்கரவாதம் தொடர்பான தனது நிலைப்பாட்டை ஐக்கியதேசியக்கட்சி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் உடனான பேச்சுவார்த்தை குறித்தும்; அவர்கள் மீதான தடைநீக்கம் தொடர்பாகவும் ஐக்கியதேசியக்கட்சி வைத்துள்ள நிபந்தனைகள் என்ன என்பதையும் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

பொதுஜனஐக்கியமுன்னணி அரசாங்கம் இருக்கும்வரை நாட்டை பிளவுபடுத்தவோதுண்டாடவோ அனுமதிக்கமாட்டாது என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அனுராதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சூளுரைத்துள்ளார்.

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான முதலாவது பிரசாரக் கூட்டம் அனுராதபுரத்தில் நடைபெற்றது இக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதிசந்திரிகாகுமாரதுங்க மேற்கண்டவாறு சூளுரைத்துள்ளார்.

இப்பிரசாரக் கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். ஜனாதிபதி சந்திரிகா இக்கூட்டத்தில்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சிற்கான கதவுகள் இன்னமும் திறந்தே இருக்கிறது சமாதானத் தீர்வில் அக்கறை இருப்பின் பேச்சு வார்த்தைக்கு விடுதலைப் புலிகள் எந்நேரமும் வரலாம் இதனைவிடுத்து அவர்கள் யுத்தத்தைமேற்கொண்டால் அதற்கான தகுந்த பதிலடி கொடுக்கப்படும்

இந் நிலையில் பயங்கரவாதம் தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் தடைகுறித்தும்அத் தடையைநீக்குவது குறித்தும்

(8 ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்நிலைய தாக்குதல் புலிகள் தரப்பில் இழப்பு இல்லையாம்

(வவுனியா)

திருமலை-மூதூர் வீதியில் அமைந்துள்ள இராணுவ-பொலிஸ் நிலையம் மீது கடந்த வியாழக்கிழமை விடுதலைப்புலிகளால்மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லையென புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் பதினொரு பொலிசார் பலியானதும், 19படையினர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## ஐ.தே.கவேட்பாளர் மீது துப்பாக்கி வேட்டு
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான வன்னிமாவட்ட வேட்பாளருமான சாந்தகுமாரபுஞ்சிகே பயணம்செய்த வாகனத்தின்மீதுநேற்றிரவு7.30மணிக்கு இனந்தெரியாதோரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இத்துப்பாக்கிப் பிரயோகம் வவுனியா பூந்தோட்டம் சாந்தசோலைவீதியில்வைத்து மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்போது அவர் பிரயாணம்செய்த வாகனம் சேதமடைந்துள்ளதாகவும் புஞ்சேவா காயம் எதுவுமின்றி தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (ம)

## மேவின்சில்வா மீது அழுகிய தக்காளிப்பழ வீச்சு

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்ற பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் எம்.பி மேவின் சில்வாவை பொதுமக்கள் அழுகியதக்காளிப் பழத்தால் எறிந்து அர்ச்சனை செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று கொழும்பு மத்திய பகுதியில் இடம் பெற்றது தேர்தல் பிரசாரத்துக்கு சென்ற மேவின் சில்வா அங்கு ஆட்டோ சாரதியொருவருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு அவரைத் தாக்கினார். இதனால் ஆவேசமடைந்தமக்கள் சில்வாவைத் துரத்தித்துரத்தி

(8 ம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் இருவர் நேற்று வவுனியாவில் சுட்டுக்கொலை

(வவுனியாநிருபர்)

வவுனியா பூந்தோட்டம்மயானத்திற்கு அருகே புளொட் அமைப்பைச்சேர்ந்த இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர் சாந்தகுமார புஞ்சேவா பயணம் செய்த வாகனத்தின்மீது துப்பாக்கிப் பிரயோசம் மேற்கொள்ளப்பட்ட இடத்திலிருந்து சுமார் 200மீற்றர் இடைவெளி தூரத்தில் புளொட்உறுப்பினர்கள் இருவர்சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

வவுனியா கல்வியல்கல்லூரிக்கு அண்மையில் உள்ள மின் மாற்றிக்குப் பாதுகாப்புக் கடமையில் இருந்துவிட்டு புளொட் அலுவலகத்திற்குத் திரும்பிக் கொண்டிருக்கையிலேயே இச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான இரண்டுபுளொட்உறுப்பினர்களின் சடலங்களும் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்றிரவு இடம் பெற்ற இச்சூட்டுச் சம்பவம் டிசம்பர்மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டபின் இடம் பெற்றமுதலாவது சம்பவமாகும் (ம)

### அரச ஊழியர்களின்
## இடமாற்றம் - பதவி உயர்வுகளை உடன் இரத்துச் செய்யவேண்டும்!

[கொழும்பு]

அரசாங்கம்மேற்கொள்ளும் ஊழியர்களின் இடமாற்றம் பதவிஉயர்வு வழங்கல் மற்றும் நிரந்தரமாக்கும் நடவடிக்கைகளை உடன் ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை, ஐ.தே. கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரியா கேட்டுள்ளார்.

அரசியல் நோக்கில் இடம் பெறும் இவ் விடையம் குறித்து தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுக்காது விட்டால் சுயாதீனமாக தேர்தல் நடைபெறும் என்பதில்தமக்கு துளியளவும் நம்பிக்கையில்லை என்று ஜெயசூரியா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் கட்சித்தலைவர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்தவர்களை தேர்தல் ஆணையாளர் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் [இ]

### பருத். வைத்தியசாலையில்
## குழந்தையை மாற்றியதாக பெற்றோர் முறைப்பாடு

(மந்திகை)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் பிரசவ விடுதியில் பிரசவத்தின்போது ஆண்குழந்தையொன்று மாற்றப்பட்டுவிட்டதாகபெற்றோரால் புகார் செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் 26ம் திகதி இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கரவெட்டியில்வசிக்கும் பெண்ணொருவர் வைத்

(8 ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சிக் கூட்டின் பிரசாரக் கூட்டம் நாளை

[வவுனியா]

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை வன்னி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் செட்டிக்குளம் பிரிவில் முதலியா குளத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்

(8-ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

**(O/ L) கணிதம் 2001**

Distinction பெறுபேறடைவதற்காக ஆரம்ப அறிவிலிருந்து சகல Sectionகளும் Portionகளும் கற்பிக்கப்பட்டு, Section & Portion Rivision உடன் Pass papers & Paper Timing Practice 20 நாட்களில் தொடர்ந்து 40மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி.

(3909)

**படிவம்**

அரசாங்க சேவையின் பொது எழுதுநர், பிறசேவைகள் பண்டகசாலை, காப்பாளர், தட்டெழுத்தாளர் சேவையின் 2தரம அ வினைத்திறன் போட்டிப் பரீட்சைக்கான படிவம் விற்பனையாகின்றது நாயகபாலன் ஸ்ரோர்ஸ் மானிப்பாய்.

[3910]


உணர்ச்சியை ஊட்டி

# ஆயுதப் போராட்டத்திற்கு தூண்டியவர்கள் இன்று எம்மை ஓரம் கட்டுகிறார்கள்

## கூட்டணியின் செயல் குறித்து புளொட் கவலை

(யாழ்ப்பாணம்)

கல்வி கற்றுஉயர்பதவிவகிக்க ஆசைப்பட்ட எங்களை ஆயுதம்ஏந்திப் போராடத் தூண்டிய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இன்று ஆயுதப் போராட்டத்தினை எதிர்ப்பதும், எம்மை ஓரங்கட்டுவதும் மனவேதனை தரும் விடயமாக உள்ளது.

நேற்றையதினம் புளொட் அமைப்பின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவ் அமைப்பின் முதன்மை வேட்பாளர் ந. ரவீந்திரராசா இவ்வாறு மனக்கவலை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

கல்வி கற்கும் இளம் பராயத்தில் இனவெறியை ஊட்டி ஆயுதம் தூக்கிப் போராட வைத்த கூட்டணியினர் மக்கள் பாதுகாப்பிற்காக நேரடியாக ஆயுதம் ஏந்தி நிற்கும் எங்களை கூட்டுச் சேர்க்காமல் தங்கள் சுயநலத்திற்காக மறைமுகமாக ஆயுதம் வைத்திருக்கும் கட்சிகளை கூட்டுச் சேர்த்து மக்களின் உண்மைப் பிரதிநிதிகள் தாமே எனத் தம்பட்டம் அடிக்கின்றனர்

பாராளுமன்றம் ஏறுவதற்காக மக்களின் தயவை எதிர்பார்த்து நிற்கும் இவர்களைப் போன்றவர்கள்த எண்ணம் ஈடேறியவுடன் கொழும்பு சென்று ஏகபோக வாழ்க்கை வாழத்தலைப்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல.

மக்களின் துன்பத்திலும் இன்பத்திலும் பங்கெடுத்து வாழும் எங்களை போன்றவர்களை ஓரம் கட்டி தம்மீது நம்பிக்கையிழந்த நிலையில் புலிகளின் பெயரைக் கூறி மக்களிடம் வாக்குக் கேட்கும் இவர்களின் உண்மை ரூபத்தைப் புரிந்து கொள்வது கடினமான காரியமாக இருக்காது.

இவர்களின் கூட்டை புலிகள் ஆதரிக்கின்றார்களா, இல்லையா எனபதே கேள்விக்குறியான விடயம.

ஏனெனில் புலிகளின் போராட்டத்தினை அரசு தடைசெய்துள்ளதன்றி, அவர்களின் அரசியலை ஒருபோதும் ஒதுக்கவில்லை.

இவர்கள ஆதரித்தால்தான் தமது இருப்பைநிலைப்படுத்த வேண்டும் என்கின்ற அவசியமும் விடுதலைப் புலிகளுக்கு இடையாது.

நாங்கள் அரசின் கூலிப்பட்டாளமாகச் செயற்பட்டு நம் இனத்தையேகாட்டிக்கொடுக்கின்றோம் என்று கூறும் கூட்டணியினர் அதனை நிரூபித்தால் யாழ் குடாநாட்டைவிட்டு வெளியேறவும் நாம் தயங்கமாட்டோம்.

யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள போக்குவரத்துத் தடையை அகற்ற நடவடிக்கை எடுக்க முடியாதவர்கள் வன்னிக்கான பாதை திறப்பு என்ற பூச்சாண்டி காட்டுவது மக்களை மடையர்களாக்கும் செயலே

நாங்கள் பிழை விட்டிருந்தால் தந்தை ஸ்தானத்தில் நின்று தட்டிக் கேட்க வேண்டிய கூட்டணி, இது விடயத்தில் இல்லாத பொல்லாத

வற்றைக் கூறி தம் தேர்தல் பிரசாரத்திற்கு எம்மைப் பகடைக்காயாக்க நினைப்பது வருத்தம் தரும் செயலே: எம்மை கூட்டணியில் இணைப்பார்கள்என்ற நம்பிக்கைகள் அவர்செயலால் ஏமாற்றத்தில்முடிந்துவிட்டது என்று குறிப்பிட்டார். (உ-10)



## விளையாட்டு செய்திகள்



உலகப் புகழ் பெற்ற

## டென்னிஸ் வீரர்கள் திருமணபந்தத்தில் இணைவு

(லண்டன்)

அமெரிக்காவின் புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் ஆந்ரே அகாஸி முன்னாள் டென்னிஸ் வீராங்கனையான ஸ்டெபகிராபியை அண்மையில் திருமணம் செய்துள்ளார்

இவர் 7 முறை விம்பிள்டன் சம்பியனாகி புகழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்களன்று இவர்கள் முறைப்படி திருமணம் செய்த போதும் நீண்டகாலமாக இருவரும் இணைந்தே வாழ்ந்து வந்தனர் என்றும் நேற்று முன்தினம் ஸ்டெபி கிராப் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-2)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நொதேன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பராபரம்' வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு,

காலை 8.30 மணிக்கு விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொய்யாத்தோட்டம் விளையாட்டுக்கழகமும்,

மு. ப. 10.00 மணிக்கு ஏசியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கே. சீ. சி. விளையாட்டுக்கழகமும,

மு. ப. 11.30 மணிக்கு லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுவில் மத்தி விளையாட்டுக் கழகமும்,

பி. ப 1.30 மணிக்கு விக்ரறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிராஸ் கொப்பர் விளையாட்டுக்கழகமும்,

பி. ப. 3.00 மணிக்கு நீர்வேலி சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விக்றி விளையாட்டுக்கழகமும்,

பி. ப. 4.30 மணிக்குகாந்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பிறீபேர்ட்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இப்போட்டிகள் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (செ)

## பல்கலை விளையாட்டு அணிகள் விரைவில்தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணிகளுக்கான தெரிவு நடைபெற இருப்பதனால் அணியில் பங்குபற்ற விரும்புபவர்களை இம்மாதம 30 ஆம் திகதிக்குமுன் தமது பெயர்விபரங்களை உடற்கல்வி ஆலகில் பதியுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் பூப்பந்தாட்டம, மேசைவரிப்பந்தாட்டம், சதுரங்கம், கரம், வரிப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டு அணிகளே தெரிவுசெய்யப்படவுள்ளன.

அணிகளின் தெரிவுப்போட்டிகள் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## ஒருநாள் போட்டியில் பல்கலை அணி சம்பியன்

(வல்வெட்டித்துறை)

சென்ரர்லைட்ஸ்விளையாட்டுக் கழக அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச்சங்கம் நடத்திய விபுலானந்தன் ஞாபகார்த்தவில்லை முறையிலான மின்னல் வேககூடைப்பந் தாட்டச் சுற்றில் யாழ். பல்கலைக்கழக அணி சம்பியனாகியது.

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி 43புள்ளிகளையும் 2ஆம் இடத்தைப் பெற்ற ஜொஸ்ரார் விளையாட்டுக் கழகம் 35 புள்ளிகளையும் பெற்றது.

பண்பாடுபழக்கவழக்கம்பேணாத

# பெண்களே இன்றைய சமூக பிரச்சினைகளுக்கு காலாயுள்ளனர்

## கல்விப் பணிப்பாளர் கரும்விசனம்

[யாழ்ப்பாணம்]

மாணவர் மத்தியில் தாய்மொழியாம் தமிழை கொச்சைப்படுத்திப் பேசுகின்றநாகரிகம் ஒன்று இன்று உருவாகி வருகின்றது.

தமிழ் மொழி உச்சரிப்பில் நிறையவேசொற்பிழை, கருத்துப்பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. இவற்றுக்கு அடிப்படைக் காரணமாய் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே அமைகின்றனர்.

யாழ்.இந்து மகளிர்கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்றையதினம் அதிபர் திருமதி ச. ஜெயராசா தலைமையில் நடைபெற்ற போது நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நமது தமிழ் மொழியின் தனித்துவம்கட்டிக்காக்கப்படுவது ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதனை எக்கணமும்மறந்துவிடலாகாது என்றார்.

மேலும் கூறுகையில் யாழ்ப்பாண மாணவர்களிடம்ஒழுக்கம் அடக்கம் என்பன அர்த்தமற்று வருகின்றமை குறித்து கவலையடையாது இருக்க முடியாது.

குறிப்பாகப் பெண்களிடையே பண்பாடுபழக்கவழங்கங்களைப் பேணும் தன்மை வெகுவாகக் குறைவடைந்து, மேல்நாட்டார் கைக்கொள்வதுதான்நாகரிகம் என்றஎண்ணப்பாடு மேலோங்கிவருகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு பெற்றோர் மட்டுமன்றி பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் துணை போகாது பண்பாடு பற்றிய உறுதிப்பாட்டைப் பேண திட சங்கற்பம் பூண வேண்டும். இன்று நம் சமூகத்தில் அன்றாடம் ஏற்பட்டு வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் ஒழுக்கம் பேணப்படாமையே அடிப்படையாய் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார். (உ-9)

### குறைநிவர்த்தி சேவை

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி வலயங்களுடன் இணைந்து நடத்தி வரும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் குறைநிவர்த்தி சேவையின் அடுத்த கட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இதன் அடிப்படையில் இம்மாதம் 5 ஆம் திகதி வடமராட்சிகல்விப்பணிமனையில் உடுப்பிட்டி, மருதங்கேணி கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் 6 ஆம்திகதி பருத்தித்துறை கோட்டத்தைச்சேர்ந்த ஆசிரியர்களுக்கும், 7 ஆம்திகதி தென்மராட்சி கல்வி வலயத்தில் தென்மராட்சி, பளை கோட்டத்தைச்சேர்ந்தஆசிரியர்களுக்கும் பி.ப.1மணிதொடக்கம்நடைபெறும் என்று யாழ்மாவட்ட செயலாளர் க.குமாரசாமி


யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இலங்கை

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணித மண்டப திருத்தல்/நிறம்பூசுதல் வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டட நிர்மாண வேலைகளுக்காக இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் அல்லது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்கள் பெறத் தகுதியுடையவராவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 08-11-2001 வரை ஒப்பந்தகாரர்பதிவுப் பத்திரத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத்தொகை 5,000/-
2. மீளளிக்கப்படாத வைப்புத்தொகை 500/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 15-11-2001 காலை 10.00 மணிக்கு முன் தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பலகலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திட்டமிடல் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

தபால்பெட்டி இலக்கம்: 57
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(C-2811)

# மக்களின் பிரதிநிதிகளாக வேடம் போட்டவர்கள் இனம்காணப்பட்டுள்ளனர்

## வரதர் அணி அறிக்கை

[யாழ்ப்பாணம்]

கடந்த 20 வருடங்களாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்த அனர்த்தங்களினால் சொந்த மண்ணிலேயே நிரந்தர அகதிகளாகவும், ஆயிரக்கணக்கில் அங்கவீனர்களாகவும், விதவைகளாகவும் உயிர், உடைமைகளை இழந்து நிர்க்கதியாக வாழ்கின்ற தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பொய்யான வாக்குறுதிகளை அளித்து பாராளுமன்றம் சென்றவர்களை மக்கள் நன்கு இனம் கண்டுள்ளனர்.

அவர்கள் மீண்டும் பாராளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்றுவதற்காக உணர்ச்சி வசப்படக் கூடிய ஆரம்பகால சுலோகங்களை மக்கள் முன் உச்சரிக்கும் தந்திரோபாயங்களை கையாளுகிறார்கள்.

ஈ. பி. ஆர். எல். எவ். வரதர் அணி வன்னி மாவட்ட தலைமை வேட்பாளர் க. ஞானதாஸ் சிவம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பது பழமொழி நெற்றியில் இரத்தத்தால் திலகமிட்டவர்களும், ஆவேசமாக குரல் எழுப்பியவர்களும் இன்று நாட்டையே மறந்து சென்று விட்டார்கள்.

இப்போது தன்மானத் தமிழர்கள் சிலர் தோன்றியிருக்கிறார்கள். ஆனால் மக்கள் இம்முறை ஏமாற்று வித்தைகளை நம்பத்தயாராக இல்லை. தமிழ் மக்கள் இன்று புதிய மாற்றத்தைக் கொண்டு வரவே விரும்புகின்றனர்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாத மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டியுள்ளது. மீன்பிடிக்க தடையாக இருக்கும் எல்லைகளும், நேரங்களும் மாற்றப்படவேண்டும். விவசாயிகள் தமதுதொழிலை சிரமமின்றி மேற்கொள்வதற்கு உள்ள தடைகள், பாஸ் நடைமுறைகள், வீதிச் சோதனைகள், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தல், பொருளாதாரத்தடை என்பவை அகற்றப்பட வேண்டும். இப் பிரதான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க துணிவுள்ளவர்களையே மக்கள் இன்று எதிர்பார்க்கிறார்கள்.

யுத்தம்நிறுத்தப்பட்டு தமிழ் பேசும் மக்கள் இந்தமண்ணில இழந்தவற்றுக்கும் தியாகங்களுக்கும் தீர்வு கிட்டும் வகையிலான நிரந்தரமான அரசியல் தீர்வு உருவாக்கப்பட்டு அமைதி, சமாதானம் நிலவ வேண்டும்என்பதையே மக்கள் விரும்புகின்றார்கள்.

ஆனால் பாராளுமன்றம் சென்றவர்கள் இவற்றுக்கு மாறாக தங்கள் சுயநல அரசியலையே மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் நிராகரிக்கப்பட வேண்டும் என்பது மக்கள் விருப்பமாகும்.

உருவாகியுள்ள கூட்டு முன்னணி உண்மையில் மக்கள் நலனை கருத்திற்கொண்டு உருவாக்கப் பட்டதொன்றல்ல. பலதரப்பட்ட அரசியல் கட்சிகள 11 தமிழ்கட்சிகளின் கூட்டாக இருந்தபோதும்அவர்களுடன் அடிப்படை பேச்சுக்களைக் கூட மேற்கொள்ளாது தாமாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக வேடம் போடுவது தவறானது இந்நிலையினை இவர்கள் உணர்ந்து கொண்டார்களோ இல்லையோ மக்கள் உணர்ந்து கொண்டார்கள்.

எதிர் வரும் பொதுத் தேர்தலில் மக்கள் எம்மை தெரிவு செய்வதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சக்தியாக செயல்படுவோம். பிரதேசத்தில் அக்கறையுடனும் நேர்மையுடனும் துணிவுடனும் செயற்படக்கூடிய எமது மீன் சின்னத்திற்கே இப்முறை மக்கள் வாக்களிப்பார்கள் என்பது உறுதி. என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

# யுத்தத்திற்கு எதிராக மக்களை ஓரணியில்திரளவைக்க ஒன்றுகூடல்

## நாளை வடமராட்சியில்

(யாழ்ப்பாணம்)

தொடரும் யுத்தத்திற்கெதிராக யாழ். குடாநாட்டு மக்களை ஓரணியாய் திரண்டெழவைக்கும் முயற்சியில் 'யுத்த எதிர்ப்பு முன்னணி முழுவீச்சில் ஈடுபடவுள்ளது.

இந்தவகையில், இவ்வமைப்பின் ஆரம்ப நடவடிக்கையாக நாளைபதினம் பி. ப. 3 00 மணிக்கு வடமராட்சி நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம முன்பாக 'யுத்தத்திற்கு எதிரான ஒன்றுகூடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன்,

யுத்தத்தை எதிர்க்கும் அனைவரையும் இவ் ஒன்றுகூடலில் கலந்துகொண்டு தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் அழிவுக்கும் அவலத்துக்கும் காரணமாகிவிட்ட கொடிய யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

மக்களின் உயிர் வாழும் உரிமை உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும்.

யுத்தத்திலீடுபடும் இருதரப்பும் ஒரே நேரத்திலோ அல்லது மக்கள் நலனில் அதிக அக்கறைகொண்ட ஒருதரப்பு ஒருதலைப்பட்சமாகவோ யுத்தநிறுத்தம் செய்ய முன்வரவேண்டும் என்பதை மையமாகவைத்தே யுத்தஎதிர்ப்பு முன்னணி செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## வீடுகள் விரைவில் அமைக்கப்படும்

(இணுவில்

சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் முகாம்களில் குடியிருக்கும் மயிலிட்டி பகுதியைச் சேர்ந்த 160 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக முகாமைச் சுற்றி முட்கம்பி வேலி போடப்பட்டுள்ளது. வீடுகள் அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ-49)

## இராசி பலன்

3-11-2001
ஐப்பசி 17, சனி
துதியை ந. ப. 12 23 வரை
கார்த்திகை மு ப. 10 58வரை
இராகுகாலம்-9.04-10.34
நல்லநேரம்-3.04-4 34
அமிர்தம்

### மேடம்

தேவையற்ற விவாதம், பொருள்நட்டம், மதிப்புக் குறைவு, பெண்கள் உதவி.

### இடபம்

மனச்சஞ்சலம், காரிய அனுகூலம், போசனசுகம், கீர்த்தி.

### மிதுனம்

வியாதி, காரிய அலைச்சல்,

## தேர்தல் பிரசாரத்தை நீதி நேர்மையாக நடத்த கட்சிகளுக்கு அறிவுறுத்து

[வவுனியா]

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சகல அரசியல் கட்சிகளும் தேர்தல் சட்ட திட்ட விதிகளுக்கமைவாகத் தமது தேர்தல் பிரசாரத்தை நீதியாகவும் நேர்மையாகவும் நடத்த வேண்டுமென்று வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் எஸ். டபிள்யு. ஹேரத் சகல அரசியல் கட்சிகளையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக விடுத்த வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசியல் கட்சிகளினால் தேர்தல் தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகளுக்கு உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் தேர்தல் வன்முறை தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அரசியல் கட்சிகள் தமக்கிடையே போட்டி பொறாமை காட்டக்கூடாது. பிழையான முறைப்பாடுகளை பொலிஸ் நிலையத்தில் கொடுத்து அனாவசியமாக பொலிஸாரின் நேரத்தைக் குறைக்கக் கூடாது.

பிரசாரக் கூட்டங்களை இரவு நெடுநேரம்வரை நீடிக்காமல் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அவற்றை மேற்கொள்ளலாம என்றும் பிரசாரக் கூட்டங்களுக்கு விண்ணப்பித்து தமது முன் அனுமதியை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். [வ]

## மாணவனை காணவில்லை

(இருபாலை)

செங்குந்தா இந்துக்கல்லூரியில் ஆண்டு 9 இல் கல்வி கற்கும் கல்வியங்காட்டைச் சேர்ந்த வீரையா ஜெயகாந்தன் (வயது-13) என்பவரை கடந்த 29ஆம்திகதி தொடக்கம காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்குறித்த தினத்தன்று அம்மாணவன் கல்வியங்காட்டில் உள்ள தனது உறவினர்

## புகையிலை செய்கையில் ஆர்வம்

(இணுவில்)

தமிழ் மக்கள் இன்று புதிய மாற்றத்தைக் கொண்டு வரவே விரும்புகின்றனர்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாத மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டியுள்ளது. மீன்பிடிக்க தடையாக இருக்கும் எல்லைகளுப், நேரங்களும் மாற்றப்படவேண்டும். விவசாயிகள் தமதுதொழிலை சிரமமின்றி மேற்கொள்வதற்கு உள்ள தடைகள், தலில் மக்கள் எம்மை தெரிவு செய்வதன் மூலம் மேற்கூறிப்பிடப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சக்தியாக செயல்படுவோம். பிரதேசத்தில் அக்கறையுடனும் நேர்மையுடனும் துணிவுடனும் செயற்படக்கூடிய எமது மீன் சின்னத்திற்கே இம்முறை மக்கள் வாக்களிப்பார்கள் என்பது உறுதி. என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# தமிழ்க் கட்சி கூட்டுக்கு நாம் எதிரானவர்களல்ல

## ரவூப்ஹக்கீம் விளக்கம்

(கொழும்பு)

டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பைப் பொறுத்தளவில் அதற்குத்தாம்எதிரானவர்கள் அல்ல என்றும்,

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய பேச்சுவார்த்தை விடுதலைப் புலிகளுடன்நடைபெறும்போது அதில் தாம் பங்குகொள்ளத் தயாராய் இருப்பதாகவும் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார். இச்செய்தியாளர் மாநாடுகட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்என்றரீதியில்எனக்கு எந்தவிதமான பாதுகாப்பையும் அரசு தரவில்லை

எமக்கு எந்த நேரமும் அச்சுறுத்தல்கள் வந்த வண்ணமே உள்ளன இதனால்எமக்கு ஏற்படவுள்ள உயிராபத்துக்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

இந்நிலையில் அடுத்துவரும் சிலமணித்தியாலங்களுக்குள் எமது பாதுகாப்பிற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கத் தவறின்,இது தொடர்பாக மனித உரிமைஆணைக்குழுவில் முறையிடவுள்ளோம்என்றும் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார். (வ)

## உடற்கல்வி

# டிப்ளோமா கற்கை நெறி நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர் வரும் 6ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக் கழக சபை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கற்கை நெறிக்கானஉடற்தகுதிகாண் பரீட்சைக்த்தோற்றிய 85 பேருக்கும்நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்டவர்களை அன்றையதினம் கல்வித் தகைமைப் பத்திரங்கள், பிறப்புச் சான்றிதழ்மூலப்பிரதி,தேசிய அடையாள அட்டை மற்றும் பொருத்தமான ஆவணங்களுடன் சமுகம் தருமாறும் அழைக்கப்படுகின்றனர். (உ-2)

இராகுகாலம்-9.04-10.34

நல்லநேரம்-3.04-4 34

அமிர்தம்

**மேடம்**

தேவையற்ற விவாதம், பொருள்நட்டம், மதிப்புக் குறைவு, பெண்கள்உதவி.

**இடபம்**

மனச்சஞ்சலம், காரியஅனுகூலம், போசனசுகம், கீர்த்தி.

**மிதுனம்**

வியாதி. காரியஅலைச்சல், உணர்ச்சிவசப்படல், விரோதம்.

**கடகம்**

உறவினர் உதவி, தொழில் சிறப்பு, கௌரவம், பொருள் சேரல்.

**சிங்கம்**

தொழில் முன்னேற்றம், காரியநன்மை, நல்லநிகழ்வு, பிறர்உதவி.

**கன்னி**

புதியதிட்டம், வயிற்றுக் கோளாறு, பதற்றம், பயணம்.

**துலாம்**

பிரயாணபயம், வீண் தொல்லை, காரியத்தடங்கல், வியாதி.

**விருச்சிகம்**

நண்பர்கள் சந்திப்பு, தொழில்நன்மை, காரியம் கைகூடும், பிரயாணம்.

**தனுசு**

எடுத்தகருமம் கைகூடும். தொழில் முன்னேற்றம், மனமகிழ்ச்சி, பொருளசேர்க்கை.

**மகரம்**

தாழ்ந்தசுபாவம், காரிய இடையூறு வியாபார முன்னேற்றம, மனச்சஞ்சலம்.

**கும்பம்**

முயற்சிதாமதம், விரோதம, உடல்சோர்வு, எதிர்பாராத நன்மை.

**மீனம்**

நினைத்தகாரியம்கைகூடும், தனவரவு, வாக்குமேன்மை, பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## காணவில்லை

(இருபாலை)

செங்குந்தா இந்துக்கல்லூரியில் ஆண்டு 9 இல் கல்வி கற்கும் கல்வியங்காட்டைச் சேர்ந்த வீரையா ஜெயகாந்தன் (வயது-13) என்பவரை கடந்த 29ஆம்திகதி தொடக்கம் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்குறித்த தினத்தன்று அம்மாணவன் கல்வியங்காட்டில் உள்ள தனது உறவினர் ஒருவரின் கடையிலிருந்து மதிய உணவிற்கு வீடு செல்வதாகக் கூறிச் சென்றார் என்றும் அதன்பின் அவர் பற்றிய தகவல்எதுவும் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-221)

றவாறு அவற்றை மேற்கொளளலாம என்றும் பிரசாரக் கூட்டங்களுககு விண்ணப்பித்து தமது முன் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். [வ]

# புகையிலை செய்கையில் ஆர்வம்

(இணுவில்)

இணுவில் உடுவில், தாவடிப பகுதி விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த வகையில் தற்போது நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.(உ-49)

# நாட்டில் பரவலாக ஒசுசல அமைக்க திட்டம்

(ஈச்சமோட்டை)

நாட்டில் அனைத்து அரச போதனா வைத்திய சாலைகளுக்கு அருகிலும் அரச மருந்துவிற்பனை நிலையமான 'ஒசுசல' அமைக்க சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்துவருகின்றது.

இந்தவகையில் அடுத்த ஆண்டில் ஒசுசல மருந்து விற்பனை நிலையம் 100 ஆக உயர்த்தப்படவுள்ளது.

தற்போது அரச மருந்து விற்பனை நிலையமான 'ஒசுசல' நாட்டில் 10 நிலையங்களை மாத்திரமே கொண்டுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை கொழும்பு நகரை அண்டியே இயங்கி வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [உ-59]

# உதவிப் பதிவாளர் நிதியாளர் பரீட்சைகள்

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக் கழகங்களில் காணப்படும் உதவிப்பதிவாளர் மற்றும் உதவிநிதியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இன்று சனிக்கிழமையும் மற்றும் 4 ஆம் 10 ஆம் திகதிகளிலும் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை தென்னிலங்கையிலும், யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறஉள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் உதவிப் பதிவாளர் வெற்றிடம் ஐந்தும், உதவி நிதியாளர் வெற்றிடம் இரண்டும காணப்படுவதுடன்,

யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து உள்வாரியாக 35 இற்கும் மேற்பட்டோர் இப்பரீட்சைக்கு தோற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்றுஉள்வாரிவிண்ணப்பதாரிகளுக்கானபரீட்சையும் 4ஆம்திகதி பொதுவான ஆங்கிலப்பரீட்சையும், 10 ஆம் திகதி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (உ-2)

## மக்களை வாழ்விக்கப் போவதாக

# ஐ. தே. க. கூறுவது கேலிக்கூத்து

### விமல் ரத்நாயக்கா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி மக்களை வாழவைக்கப் போவதாகத்தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூறிவருவது கேலிக் கூத்துக்குரியதாகும்: 1977 ஆம் ஆண்டில் இக்கட்சி ஒழுக்கமுள்ள சமுதாயமொன்றைக் கட்டி எழுப்பவேண்டும் என்று கூறிவிட்டு இளைஞர்களைக் கொன்று குவித்ததை மக்கள் எளிதில் மறக்கமாட்டார்கள்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் குருநாகல் முதன்மை வேட்பாளர் விமல் ரத்நாயக்கா கூறியுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விமல் ரத்நாயக்கா மேலும் பேசுகையில் கூறியதாவது;

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பல வாக்குறுதிகளை இப்போது அளித்து வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்து வைத்த இனப்பிரச்சினையே நாட்டின் இன்றைய நெருக்கடிகளுக்குகாரணமாக பூதாகாரமாக எழுந்துள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சி பிரச்சினைகளைத் தீர்க்கத்தகுயாராக இருப்பதாகக் கூறிவருவது நகைப்பிற்கு இடமாகும். (எ-வ)

### யாழ். பல்கலைக்கழக

## சுகாதார நிலையத்திற்கு மருந்தாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சுகாதார நிலையத்திற்கு 'மருந்தாளர் ஒருவர் முதல் தடவையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சுகாதார நிலையத்தை நாடும் மாணவர் தொகையும், ஊழியர் தொகையும் கணிசமானளவு அதிகரித்துள்ளதனால் கூடிய ளவு மருந்துகளை கையாள வேண்டிய தேவை ஏற்பட்டதனாலேயே மருந்தாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலை வட்டாரங்கள் தெரிவித்தன;

இதேவேளை யாழ். பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக பொது சுகாதார பரிசோதகர்கள் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது; (உ-2)

## பழுதடைந்த உணவுப் பண்டம் விற்றவர்களுக்கு தண்டம்

[யாழ்ப்பாணம்]

காலவாதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்த இருபாலைச் சந்தி வர்த்தகர்கள் நால்வருக்கு தண்டப்பணம் செலுத்துமாறு யாழ்மாவட்ட நீதிவான் இ. த விக்கினராஜா உத்தரவிட்டுள்ளார்.

இவர்களில் இருவர் தலா 8 ஆயிரம் ரூபாவும் மற்றைய இருவரும தலா 5 ஆயிரம் ரூபாவும் தண்டமாகச் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்தமாதம் பொதுச் சுகாதாரப்பரிசோதகர் இருபாலைச் சந்தி வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட போது காலாவதியான பொருட்களைவிற்பனை செய்த வர்த்தகர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது; (இ-10)

## தேர்தலுக்கு முன் இரு மாத நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

தேர்தலுக்கு முன் இம்மாதம் மற்றும் அடுத்த மாதம் பொதுமக்களுக்கான நிவாரணம் விநியோகிக்கப்படவிருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டே இந் நடைமுறைஅமுல் படுத்தப் படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-10)

## கிறிஸ்து பிறப்பை ஒட்டி நாடக பிரதியாக்க போட்டி

(ஈச்சமோட்டை)

எதிர்வரும் கிறிஸ்து பிறப்பு பெரு விழாவை முன்னிட்டு யாழ். திருமறைக்கலா மன்றத்தினரால் நாடகப்பிரதியாக்கப் போட்டியொன்று நடத்தப் படவுள்ளது.

கிறிஸ்து பிறப்பைசமகாலத்துடன் இணைத்து எழுதப்பட்டு 45நிமிடங்களுள் மேடை ஏற்றப்படக் கூடியதாக இந் நாடகப் பிரதி அமைய வேண்டும் எனவும்,

இப்போட்டிக்கான பிரதிகள் இம்மாதம் 15ஆம்திகதிக்கு முன்னர் கலாமன்ற அலுவலகத்தில்சேர்க்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது; (உ-59-106)

## சிஹலஉறுமய தலைவருக்கும் அந்திரெக்ஸ் கடிதம்

(கொழும்பு)

சிஹலஉறுமயவின் தலைவர் திலக கருணாரட்ணவிற்கு கடந்த வாரம் அந்திரெக்ஸ் துளைகள் அடங்கியதாக சந்தேகிக்கப்படும் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடிதத்தை உடைத்துப் பார்த்த பொழுது சந்தேகத்திற்கிடமான துகள்கள் இருப்பதை அவதானித்த அவர் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்ததன் பேரில் உடனடியாக பொலிஸார் இவரை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தியதுடன்கடிதத்தை இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்; [உ-5]

## இத்தாலி செல்ல முயன்ற 30 இளைஞர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக படகு ஒன்றின் மூலம் இத்தாலி செல்ல முயன்ற 30 இளைஞர்களை சிலாபம் பொலிசார் கடந்த புதன் மாலை கைது செய்துள்ளனர்.

பொலிசாருக்குக்கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினையடுத்து தேடுதல் நடவடிக்கை மேற் கொண்ட போது இழுவைப்படகு ஒன்றினையும். அதற்குள் இருந்த ஆயிரம் லீற்றர் எரிபொருள் சுமார் 500 தண்ணீர் போத்தல்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளதாக சிலாபம் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி சி ஐ. தயானந்த தெரிவித்துள்ளார்.

சிலாபம், நீர் கொழும்பு, வத்தளை, ஜாஎல ஆகிய இடங்களைச் சேர்ந்த மேற்படி இளைஞர்கள் தமது பயணத்திற்காக நான்குலட்சம் ரூபாவை முகவர் ஒருவரிடம் செலுத்தியதாகவும் விசாரணைகள் மூலம்தெரியவந்துள்ளது;

இவர்களை ஏற்றிச்செல்ல இருந்த நபர்ஒருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர். (ந-4)

## சகல வேட்பாளர்களும் சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளின் வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை வெளியிட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வேட்பு மனுத்தாக்கல் செய்த மூன்றுமாத காலத்தினுள் இச் சொத்து விபரங்களை வெளியிட வேண்டுமென அவர் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலில் வெற்றியீட்டி பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப் படுவோர் தமது சொத்து விபரங்களை சபாநாயகருக்கு தெரிவிக்க வேண்டுமெனவும் அவர் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-4)

## இளைஞனை காணவில்லை

செட்டியார் தெருவிலுள்ள நகைக் கடைஒன்றில் தொழில் பழகுவதற்காக சென்ற இளைஞன் ஒருவரை ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து காணவில்லையென கல்முனை தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம்உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

பாண்டிருப்பு 2 ஆம் குறிச்சியைச் சேர்ந்த தியாகராஜா சுபாஸ்கரன் (வயது-15) என்பவரே காணாமல் போயுள்ளார். (ந-4)

# செய்தித் துளிகள்

## விபத்தில் காயம்

(வல்வெட்டித்துறை)

யாழ். பஸ் நிலையத்திற்கு அண்மையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் எதிரில் வந்துகொண்டிருந்த சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியதில் காலில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்

கடந்த செவ்வாய் இடம் பெற்ற இச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பிலிப் செல்வரெட்ணம் (வயது 54) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார் [செ-217]

## பயிர்களை காக்க வேலி

(வரணி)

வரணி, இடைக்குறிச்சி விவசாய சம்மேளனம் அப்பகுதி வயல் நிலங்களிலுள்ள பயிர்களை கால் நடைகளின் அழிவில் இருந்து காப்பாற்றும்பொருட்டு. வேலி அமைப்பதற்கு முட்கம்பிகளை வழங்கிவருகின்றது. (எ-211)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(ஏழாலை)

மதுபான நிலையமொன்றின் முன்பு நிறுத்தி வைக்கப்பட்ட ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

மல்லாகம் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் குறித்து அறியவருவதாவது;

கடந்த திங்கட்கிழமை இரவு 7.00 மணியளவில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தனது ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிளில் மல்லாகம் பகுதியில் உள்ள ஒரு மதுபானக் கடைக்குச் சென்று, மோட்டார் சைக்கிளை கடையின் முன்பு நிறுத்திவிட்டு உள்ளே சென்று திரும்பி வந்து பார்த்தபோது அதைக் காணவில்லை.

இச்சம்பவம் குறித்து மோட்டார் சைக்கிள் உரிமையாளர் சுன்னாகம்பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (எ-12)

## 5 பேருக்கு முன் பிணை அனுமதி

[வவுனியா]

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தேடப்பட்டு வந்த 14 பேர்களில் 5பேர் வவுனியா மனித உரிமைச் சங்கத்தில் சரணடைந்துள்ளார்கள்;

சரணடைந்த ஐவரும் உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின் முன் பிணை அனுமதி பெற்று விடுவிக்கப் பட்டுள்ளனர்;

விடுவிக்கப் பட்ட இந்த ஐவரையும் நீதிவான் அனுமதி இன்றி கைது செய்யவோ, விசாரிக்கவோ, முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ]

## இளம் பெண்ணைக் காணவில்லை

[யாழ்ப்பாணம்]

வீட்டில் இருந்து புறப்பட்டு தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்ற பெண் ஒருவர் இன்னமும் வீடு திரும்பவில்லை என்று அவரது மாமனாரால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த உலகநாதன் உஷா [வயது 21] என்ற பெண்ணே கடந்த மாதம் முதல் காணாமல் போனவராவார். [உ-9]

## வேட்பாளர்களின் இலக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புச் சார்பாக பொதுத் தேர்தலில் போட்டியிடும் யாழ் மாவட்டவேட்பாளர்களின் இலக்கங்கள் வெளியாகியுள்ளன. வேட்பாளர்களின் பெயர்களும் அவர்களின் இலக்கங்களும் வருமாறு;

அ. விநாயகமூர்த்தி - 1
அரவிந்தன் - 2
வீ. ஆனந்தசங்கரி - 3
க. பிரேமச்சந்திரன் - 4
க. சிவஞானம் - 5
க. சிவாஜிலிங்கம் 6
கா. சந்திரராசா - 7
பொ. கஜேந்திரகுமார் - 8
ந. இரவிராஜ் - 9
க. தங்கவேல் - 10
சி. சிவமகாராசா - 11
மாவை சேனாதிராசா - 12

(செ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ் மணியம் சட்டடத்தில் இயங்கும் சுகாதாரதொண்டர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் ஒகஸ்ட் செப்டெம்பர் மாதக் கொடுப்பனவுகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (ந-4)

## இலங்கைக்கு 100 மில்லியன் கடன்

(கொழும்பு)

இலங்கைக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா கடனாக வழங்கியுள்ளது;

இக்கடன்தொகை இலங்கை வங்கி மூலமாக அரசாங்கத்திற்கு வழங்கப்படுமென்று இலங்கை வங்கி பொதுமுகாமையாளர் ஏ. சரத் டீ சில்வா தெரிவித்துள்ளார்; (இ)

## இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

முதுநிர்வாகமாணி பட்டக் கல்வியை தொடர்வதற்காக கிடைத்த புலமைப்பரிசிலுக்கமைய, யாழ். பல்கலை வவுனியா வளாகத்தில் உதவிப் பதிவாளராக கடமையாற்றிய வி. சிவலோகதாஸன் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். [உ-2]

## 6 தினங்கள் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கமநல சேவை நிலையங்கள் அனைத்தும் அடுத்த இரு மாதங்களில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பூரணமாக இயங்குமென்று யாழ்மாவட்ட கமநல திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

தற்போது விவசாயிகளுக்கு விதை நெல், நல்லின மரக்கறி விதைகள், உரம் கிருமிநாசினி என்பன கமநல கேந்திர நிலையங்கள் மூலம் விநியோகிக்கப் படுவதால் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (உ-4)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

திருமறைக்கலாமன்ற கலைஞர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது. (உ-106)

இன்று ஒரு தகவல்

## வேடனும் முனிவரும் சமமா?

ஒரு அடர்ந்த காட்டிலே வேடன் ஒருவன் வேட்டையாட நதிக்கரையோரம் சென்று கொண்டிருந்தான். அப்போது ஒரு மரப்பொந்தில் கிளி இருப்பது கண்டு அவற்றைப்பிடிக்கஏறினான். தாய்க்கிளி இரைதேடச் சென்றுவிட்டது அதில் இருந்த இரு கிளிக்குஞ்சுகளையும் வேடன் பிடித்துக் கொண்டு சென்றான். செல்லும் வழியில் தாகம் எடுக்க இரு கிளியையும் ஓரிடத்தில் வைத்துவிட்டு நீர் அருந்தினான்.

அப்போது ஒரு கிளி பறந்து சென்றுவிட்டது. வேடன் ஒரு கிளியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டான். பறந்து சென்ற கிளி ஒரு மரக்கிளையில் இருந்து அழுதுகொண்டிருந்தது. அவ்வழியே ஒரு முனிவர் வந்தார். அவர் அக்கிளியைப்பார்த்து ஏன் அழுகிறாய்? எனக்கேட்கக் கிளி நடந்தவிடயத்தைக் கூறியது. இரக்கங்கொண்ட முனிவர் அக்கிளியைத் தன்னோடு எடுத்துச்சென்று அதற்குப் பேசக் கற்றுக்கொடுத்தார். அதேபோல் வேடனும் தான் கொண்டு சென்ற கிளிக்குத் தானும் பேசக்கற்றுக்கொடுத்தான்;

ஒருநாள் அந்நாட்டு மன்னன் வேட்டை ஆடுவதற்காக காட்டிற்குச் சென்று அலைந்து திரிந்ததால் அவனுக்குத் தாகம் ஏற்பட்டது. அப்போது அவனுக்கு ஒரு குடிசை தென்பட்டது அங்கே சென்றால் நீர் அருந்தலாம் எனக்கருதி அவன் அங்கு சென்றான். அப்போது அக்குடிசையில் இருந்த கிளி இங்கு யாருமில்லை. இங்கே வராதையடா, திரும்பிச் செல்லடா என உரத்துக் கெட்ட வார்த்தைகளால் பேசியது; கோபமடைந்த மன்னன் திரும்பிச்சென்று முனிவரது ஆச்சிரமத்தை அடைந்தான். அப்போது அங்கு ஒரு கிளி வாருங்கள் அரசே! அமருங்கள்; உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு அவரது தாகம் தீர்த்தது.

மன்னன் தான் முதற்சென்ற குடிசையில் கிளி நடந்து கொண்ட விதத்தையும், அதனால்தனக்குஅதன்மேல் வந்த கோபத்தையும் கூறினான். அதற்கு அந்தக்கிளி அது வேறு யாருமல்ல, எனது சகோதரனே எனக்கூறி நடந்த விடயங்களை ஒன்றும் விடாமல் கூறியது.

தான் முனிவரிடம் வளர்ந்ததால் முனிவர் தனக்கு நல்ல பழக்கவழக்கங்களையும் நல்ல வார்த்தைகளையும் பழக்கினார். வேடனோ அக்கிளிக்குத் தீய பழக்கங்களையும் கெட்ட வார்த்தைகளையும் பழக்கினான். நாங்கள் இருவரும் ஒரு தாயின் வயிற்றிற் பிறந்தபோதும் இருவரது வளர்ப்புமே வேறுபட்டுக் காணப்பட்டதால் பழக்க வழக்கமும் வேறுபட்டுக் காணப்பட்டது.

இதேபோன்றுதான் மனிதரும் மண்ணில் பிறக்கும்போது நல்லவராகவே பிறக்கின்றனர். அவர்கள் வளரும் குடும்பம், சமூகம், சமுதாயம் என்பவற்றைப் பொறுத்து அவர்கள் நல்லவர்களாக உயர்பதவி வகிக்கவும், சிலர் தீய வழியில் செல்லவும் வழி வகுக்கிறது. எனக் கிளி விளக்கம் கூறியது. இதைக்கேட்ட மன்னன் அக்கிளிமேல் மட்டற்ற மதிப்பும், பக்தியும் கொண்டு அக்கிளியைப் பாராட்டிச் சென்றான்; □

க. கேதீஸ்வரன்
வரணி

## எயிட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்த யாழில் குறுந் திரைப்படம் தயாரிப்பு

(ஈச்சமோட்டை)

எயிட்ஸ்நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக 'தண்டனை' என்ற குறும் திரைப்படம் குருநகர் இளைஞர் கலைக் கழகத்தினரால் விரைவில் வெளிவிடப்படுகின்றது.

இக் குறுந்திரைப்படத்திற்கான ஆரம்பவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை 5.00 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இத்திரைப் படத்திற்கான திரைக்கதை வசனம், பாடல் மற்றும் நெறியாள்கையை ஜெயந்கணனி நிலைய இயக்குநர் இராயப்புவும் மேற்பார்வையை வி. ஜே. கொன்ஸ்ரன்ரைனும் மேற்கொள்ளவுள்ளனர்

இத்திரைப்படத்தின் மூலம் பல சமூக சீர்திருத்தங்கள் ஏற்பட உதவியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-59)

## விண்ணப்பங்களை விரைந்து அனுப்புக

[யாழ்ப்பாணம்]

யாழ் தொழில் நுட்பக்கல்லூரியில் புதிய கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்ப முடிவு இம்மாதம் 18 ஆம் திகதி ஆகையினால் விரைந்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

(உ-2)

## மனைவியின் கத்திக்குத்து, கணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

மனைவியின் கத்திக்குத்துக்கு இலக்கான ஒருவர் உயிரிழந்த சம்பவம் நடந்த திங்களன்று கொழும்பு நாரஹேன்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வழமையாக சண்டையில் ஈடுபடும் இவர்கள் அன்றைய தினமும் சச்சரவில் ஈடுபட்டபோதே மனைவி கணவனின் நெஞ்சுப் பகுதியில் கத்தியால் குத்தியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

(உ-5)

## சிங்கள இராச்சியமே எங்கள் குறிக்கோள்

(புத்தளம்)

இந்த நாட்டில் சிங்கள இராச்சியம் ஒன்றை ஸ்தாபிப்பதே எமது முக்கிய குறிக்கோளாகும் ஏனெனில் சிங்களவர்களே அதிகளவில் ஏழைகளாகவும், வறுமைப் பட்டவர்களாகவும் உள்ளனர் என்று புத்தளம் மாவட்டத்தில் சிஹல உறுமய சார்பில் போட்டியிடும் அதன்தலைமை வேட்பாளர் சுரேன்வாஸ் தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்ட கச்சேரியில் தமது வேட்பு மனுவைச் சமர்ப்பித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

இன்று மக்களை பிரித்து வேடிக்கை பார்ப்பது அரசியல் வாதிகளே. சிங்களவர்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டில் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தனர். அவர்களது ஒற்றுமைக்கு இனவாத அரசியல் நடத்தும் அரசியல் வாதிகளால் இடையூறு ஏற்பட்டது. இந்த நாட்டில் சிங்கள இராச்சியம் அமைக்கப்படுவதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கு நாம் ஏற்படுத்திக் கொடுக்கும் வரம்புகளையும் சட்டதிட்டங்களையும் பேணி வாழ்வதே அவர்களின் கடமை என்று தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

[எ]

## பஸ் சேவை விஸ்தரிப்பு

(கொழும்புத்துறை)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பாடசாலைச் சேவை கொழும்புத்துறை வரை நடைபெற்று வருகின்றது.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், பாசையூர் சென் அன்ரனீஸ் வித்தியாலயம் வரை இந்தச் சேவை தற்போது நடைபெற்று வருகிறது.

இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பிற இடங்களில் வாழும் மாணவர்களின் நலன் கருதியே இச்சேவை இடம் பெறுகிறது.

(உ-223)

## அரசியலில் புனிதர்கள் என்று எவரும் இல்லை
### சீ. வி. கே. சிவஞானம் உரை

(யாழ்ப்பாணம்)

"யுத்த நிறுத்தம், சமாதானம், புலிகளுடனான பேச்சுவார்த்தை ஆகியவற்றை வலியுறுத்தி 1988 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வெள்ளைக் கொடி தினத்தை நடத்தி மக்களின் பேராதரவு பெற்றவன் என்ற முறையில் பதின்மூன்று வருடங்களின் பின் அதே கொள்கையை முன்னிறுத்தி தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளராக மக்கள் முன் வந்துள்ளேன்."

நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பில்போட்டியிடும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளரும் யாழ். பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தலைவருமான சீ. வி. கே. சிவஞானம் இவ்வாறு தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் கே. கே. எஸ் வீதியில் அமைந்திருக்கும் யாழ். பல நோ. கூ. சங்க தலைமைக்காரியாலயத் தின் கீழ் மாடியிலுள்ள வர்த்தகப் பிரிவில் 'ஒசுசல' மருந்து விற்பனை நிலையம் ஒன்றை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; நாம் நாகரிகமான அரசியல் வழிகளையே பின்பற்றுவோம். அரசியலில் புனிதர்கள் என்று எவரும் இல்லை, எனவே பிறரைப்பற்றி விமர்சிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு இல்லை, கூட்டுறவு, உள்ளூராட்சி ஒய்வூதியர் ஆகியதுறைகளுக்கு விசேட அக்கறை செலுத்தி அவற்றை மேலும் வளர்த்தெடுக்கும் பணியில் அயராது பாடுபடுவேன்.

கூட்டமைப்பு இன்று காலத்தின் தேவையாகும். தேசிய இனங்களுக்கிடையே சமாதானம் ஏற்படுவதுஇந்த நாட்டை பல்வேறுவழிகளில்அபிவிருத்தி செய்ய உதவும் எனது அரசியல் பிரவேசம் நேரடி அரசியலில் ஈடுபடும் உரிமையை மேலும் வலுவூட்டும் என எதிர்பார்க்கிறேன என்றார்.

யாழ். ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை உறுப்பினர் எஸ். ரி. கணநாதன் சங்கப் பொது முகாமையாளர் எஸ். சிவப்பிரகாசம் மற்றும் ஜேக்கப் உட்பட பலர் இந் நிகழ்வில்கலந்து உரை நிகழ்த்தினர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பணியாளர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(உ-106)

## பாண் விற்பனை நிலையங்கள் மீது வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

தரம் குறைந்த பாணை விற்பனை செய்வது தொடர்பாக நான்கு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம், உரும்பிராய், மருதனார்மடம், இணுவில் பகுதிகளைச்சேர்ந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவே வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டிருப்பதாக விலைக்கட்டுப்பாட்டு திணைக்களம்தெரிவித்துள்ளது.

(உ-10)

## முன்னாள் பா. உறுப்பினர்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் மாதிரிவெல குடியிருப்புக்களிலிருந்து அவர்களை வெளியேறுமாறு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து பெரும்பாலான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

கடந்தபுதன்கிழமைக்கு முன்னர் அவர்களை வெளியேறுமாறு அரசாங்கம் விடுத்த பணிப்புரைக்கு இணங்கவே அவர்கள் வெளியேறியுள்ளனர்.

(உ-5)

## தென்னிலங்கைக்கலைஞர் சில தினங்களில் வருவர்

[யாழ்ப்பாணம்]

திருமறைக்கலாமன்ற தென்னிலங்கை சிங்களக் கலைஞர் குழு இம் மாதம் 12ஆம் திகதி யாழ்ப்பாணம்வருகை தரவுள்ளது.

40பேர் அடங்கிய இக் குழுவினர் யாழ்ப்பாணம், மானிப்பாய், மருதனார்மடம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் சிங்கள பாரம்பரிய கலைவடிவங்களை நிகழ்த்திக்காட்டுவர் 20ஆம் திகதி தமது கலைப் பயணத்தை முடித்துக் கொண்டு தென்னிலங்கை திரும்புவர்.

[உ-106]

## தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் குடாநாட்டிற்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 317 பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

அதேசமயம், இங்கிருந்து சேகரிக்கப்பட்ட 41 தபால் பொதிகள் அக்கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் யாழ். குடாநாட்டிற்கான குறிப்பிடப்பட்ட அளவு தபால் பொதிகள் திருமலையில் உள்ளதாகவும் கப்பலில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக எடுத்துவரப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ- 10)

## முச்சக்கரவண்டிச் சேவை மட்டு நகரில் ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் முச்சக்கரவண்டிச் சாரதிகள் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டி சங்கத் தலைவர் கந்தசாமி தவராசா கோட்டைமுனை சோதனைச் சாவடியில் வைத்து அண்மையில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதை கண்டித்தும், இனிமேல் இத்தகைய தாக்குதல் இடம்பெறமாட்டாது என உறுதிமொழியை இராணுவ தரப்பு வழங்க வேண்டும் எனக் கோரியும் இவ்வேலை நிறுத்தம் இடம் பெறுவதாக தெரியவருகிறது.

(உ-4)

## தாக்குதல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணியின் ரெதிகம பிரதேசசபைத் தலைவர் வெல்கத் குலதுங்க அண்மையில் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

தொடங்கஸ்கந்தையில் உள்ள அவரது அலுவலகத்திற்கு வானில் வந்த ஐக்கிய தேசியக்கட்சித் தொண்டர்களே இத்தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப் படுகிறது;

(உ-4)

## சிந்தனைக்கு விருந்து

அப்பப்பா காலமானார்

பாயிற் கிடக்குமுன் பல்பிணியும் சேருமுன்
நோயுமிறு திச்சேடம் தோன்றியே -சாயுமுன்
ஒய்வூதி யங்கிடைக்கும் என்றிருந்த அப்பப்பா
காய்வுற்றுக் காலமா னார்.

'பழையவன்'

# இஸ்ரேலுக்கு எதிராகப் போராட 5 ஆயிரம் ஈராக்கியர் தயார்

(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கு எதிராக யுத்தம் நடத்தும் முகமாக 5 ஆயிரம் ஈராக்கியர்கள் தமது இராணுவப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு பலஸ்தீனத்துடன் இணைந்துள்ளதாகவும், இவர்கள் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேலியர் மீது வெகுவிரைவில் தாக்குதல் நடத்துவார்கள் என்றும் வெளிநாட்டு செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இரண்டு மாத காலமாக கடும இராணுவப் பயிற்சியில் ஈடுபட்ட மேற்படி 5 ஆயிரம் ஈராக்கியரும், ஈராக் அதிபர் ஜனாதிபதிசதாம்ஹுசைனின் உத்தரவின் பேரிலேயே பலஸ்தீனத்துடன் இணைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேலுக்கு எதிரான யுத்தத்தில் பலஸ்தீனத்துருப்புக்களுக்கு தான் சகல விதத்திலும் உதவ முன் வந்துள்ளதாக ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் தெரிவித்திருப்பதாகவும்,

பலஸ்தீன அதிபர் ஜஸீர் அரபாத்திற்கும்சதாம் ஹுசைனுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று இடம்பெற்றதாகவும் செய்திகள் வெளியானமையும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

# இயேசுநாதரின் சிறுவயது திருவுருவை வரைந்த கேரள ஓவியர்

(புதுடில்லி)

கேரளாவைச் சேர்ந்த பிரபல ஓவியர் ஜிஜோபிலிப் என்பவர் இளம் வயது இயேசுநாதரை வரைந்துள்ளார்.

இந்த அரிய ஓவியத்திற்கு இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாட்டுத் தலைவர்களிடையேயும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இயேசுநாதர் 12வயதுமுதல் 30வயது வரை எப்படித் தோற்றம் அளித்தார் என்பதை யாரும் அறிந்திராத போதும் அந்த தோற்றத்தை தனது கற்பனையில் ஓவியமாக இவர் தீட்டியுள்ளார்.

இந்த ஓவியரின் முயற்சியை பரிசுத்த பாப்பரசர் உட்பட பல தலைவர்களும் பாராட்டியுள்ளனர். (உ- 2)

# அமெரிக்க தாக்குதல் மனிதாபிமானமற்றதாம்

## சுகர்ணோ புத்திரி தெரிவிப்பு

(ஜகார்த்தா)

ஆப்கான்மீதான அமெரிக்க விமானத் தாக்குதல்கள் மனிதாபிமான அடிப்படையில் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அது யுத்த நிறுத்தமாக அமையவேண்டும் என்றும் இந்தோனேஷிய ஜனாதிபதி மேகவதி சுகர்ணோ புத்ரி கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதத்தை தான் எதிர்ப்பதாகவும் கண்மூடித்தனமான தாக்குதல்கள், பயங்கரவாதத்திற்கெதிரான போர் நடவடிக்கைகளுக்கு உலக ஆதரவை அற்றுபோகச் செய்யும் என்றும் இஸ்லாமியரின் நோன்பு இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாக இருப்பதால்ஆப்கான் மீதான அமெரிக்க தாக்குதல்களை இடைநிறுத்தவேண்டும் என்றும், கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்திலும் யுத்தம் நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர் பேலுப் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-2)

# உலக தரிசனம்

## அமெரிக்க அமைச்சர் புதுடில்லி விஜயம்

(புதுடில்லி)

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட்றக்சன் ஒருநாள் பயணமாக புதுடில்லிக்கு செல்லவுள்ளார்.

திங்கட்கிழமை புதுடில்லி செல்லவிருக்கும் அமைச்சர், இந்தியப்பாதுகாப்புஅமைச்சர் ஜோர்ச் பெர்ணாண்டஸுடனும், இந்திய அமைச்சர்களுடனும் பேச இருக்கிறார்.

அப்பேச்சுக்கள் பெரும்பாலும ஆப்கான் அமெரிக்க போர் பற்றியதாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டமைப்பு பற்றியும் பேசவுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொனால் ட்ரக்சன் தெரிவித்தார். (கு)

# அமெரிக்க நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கத் தவறின் அரிய வாய்ப்பை இழக்க நேரிடும்

## வடகொரியாவுக்கு எச்சரிக்கை

(சியோல்)

அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளுக்குவடகொரியா ஆதரவு வழங்கத் தவறுவதால் நல்லதொரு வாய்ப்பை அது இழக்க நேரிடும் என்று தென்கொரியாவிற்கான அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவினால் தேடப்

இவ் விடயத்தில் வடகொரியா அமெரிக்காவுடன் இணையாதவிடத்து அந்நாடு அரிய வாய்ப்பை இழக்கப் போகிறது என்றும் எச்சரித்துள்ளார்.

அத்துடன் பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு சகல நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்கா விடுத்

# தனிப்பட்டோர் உரிமைகள் மறுக்கப்படுவதை தவிர்க்க வேண்டுகோள்

(வாஷிங்டன்)

பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம் என்ற போர்வையில் தனிப்பட்டவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதை ஒவ்வொரு அரசாங்கமும் தவிர்க்க வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கை என்ற விடயத்தில் சகல நாடுகளும் கூட்டிணைந்து செயற்பட வேண்டும் அதேவேளை, மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் ஐ நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவி மேரி றொபின்சன் கேட்டுள்ளார்.

189 நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் ஐ நா பொதுச் சபைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலிற்கு மத்தியில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதில் சகலரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

பழிவாங்கும் எண்ணத்தை கைவிட்டு நியாயமான நடவடிக்கை எடுப்பதன் மூலமே பயங்கரவாத தாக்குதலில் பலியானவரின் குடும்பங்கள் மற்றும் நண்பர்களுக்கு ஆறுதல் அளிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளமை கவனிக்கத் தக்கது. (உ-2)

# பின்லேடனுடன் தொடர்புடைய பாக். விஞ்ஞானிகள் மூவர் அமெரிக்கா வசம்

(இஸ்லாமபாத்)

ஓய்வுபெற்ற 3 அணு விஞ்ஞானிகளை பாகிஸ்தான அமெரிக்காவிடம் ஒப்படைத்துள்ளது.

இவர்கள் ஒஸாமாபின்லேடனுடன் தொடர்பு வைத்திருந்

பஷீருதீன் பாகிஸ்தானின் மூத்த அணு விஞ்ஞானிகளில் ஒருவராவார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த இவர்கள்

(சியோல்)
அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளுக்குவடகொரியா ஆதரவு வழங்கத்தவறுவதால் நல்லதொரு வாய்ப்பை அது இழக்க நேரிடும் என்று தென் கொரியாவிற்கான அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவினால் தேடப்படும் பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடன் பற்றிய தகவல்களை வடகொரியா வெளிப்படுத்தவேண்டும் என்றும் அதனை அமெரிக்கா வரவேற்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ் விடயத்தில் வட கொரியா அமெரிக்காவுடன் இணையாதவிடத்து அந் நாடு அரிய வாய்ப்பை இழக்கப் போகிறது என்றும் எச்சரித்துள்ளார்.

அத்துடன் பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு சகல நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்கா விடுத்துள்ள அழைப்பை பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வட கொரியா போன்ற நாடுகளுக்கும் ஏற்புடையது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் கூறி உள்ளார். (உ-2)

அப்பேச்சுக்கள் பெரும்பாலும் ஆப்கான் அமெரிக்க போர் பற்றியதாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டமைப்பு பற்றியும் பேசவுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட் றக்சன் தெரிவித்தார். (து)

# பாக். விஞ்ஞானிகள் மூவர் அமெரிக்கா வசம்

(இஸ்லாமபாத்)
ஓய்வுபெற்ற 3 அணு விஞ்ஞானிகளை பாகிஸ்தான அமெரிக்காவிடம் ஒப்படைத்துள்ளது.

இவர்கள் ஒஸாமாபின்லேடனுடன் தொடர்பு வைத்திருந்தார்களென பாகிஸ்தானால் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

ஒப்படைக்கப்பட்ட 3 அணு விஞ்ஞானிகளில் சுல்தான் பஷீருதீன் பாகிஸ்தானின் மூத்த அணு விஞ்ஞானிகளில் ஒருவராவார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த இவர்கள் கடந்த 26 ஆம் திகதி விடுவிக்கப்பட்டு மீண்டும் 28ஆம்திகதி கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றபின் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (உ-5)

# வீரப்பன் சகாக்கள் இருவர் ஈரோட்டில் கைது

(ஈரோடு)
கன்னட நடிகர் ராஜ்குமாரைக்கடத்துவதற்கு சந்தன மரக்கடத்தல் வீரப்பனுக்கு உதவியாக இருந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள், ராஜ்குமார் கடத்தலுக்கு உதவியாகஇருந்தார்கள் என்றதன் பேரில் மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈரோட்டிலுள்ள தாளவாடியில் வைத்துச் சந்தேகத்தின் பேரில் கைது செய்த வேளை அவர்கள் இருவரிடமிருந்தும் துப்பாக்கிகளும் வெடி பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஈரோடு பொலிஸார் இது தொடர்பாக மேலும் மூவரைத் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (து)

# யுனிசெப் உச்சிமாநாடு மே மாதம்

(நியூயோர்க்)
ஐக்கிய நாடுகள் குழந்தைகள நிதியத்தின் (யுனிசெவ்) உச்சி மாநாட்டை எதிர் வரும் வருடம் மே மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடத்த ஐ.நா. தீர்மானித்துள்ளது.

இம் மாநாட்டில் உலகச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சி, சுகாதாரம், வாழ்க்கைத் தரம் மற்றும் இளம் பிள்ளைகளின் தேவைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்துஇம் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதும் தெரிந்ததே. (உ-2)

# புஷ் நிர்வாகம் புதிய நடைமுறை

[வாஷிங்டன்]
அமெரிக்காவிற்கு விசா அனுமதி பெறாமல் செல்லக்கூடிய 29நாட்டவர்களின்பட்டியலில் இருந்து 6 நாடுகளை நீக்கி விட அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

நாட்டில் அதிகளவு உல்லாசப் பயணிகளை வரவழைப்பதன் மூலம் அதிகளவு வருவாயைப் பெறும் நோக்கில் இதற்கு முன் பதவியிலிருந்த கிளிங்டன் நிர்வாகம், 29 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவிற்கு விஜயம் செய்து 90 நாட்கள் தங்குவதற்கு விசா பெறத் தேவையில்லை என அறிவித்திருந்தது.

ஆனால், தற்போது புஷ் அரசாங்கம் ஆர்ஜன்டீனா, பெல்ஜியம், இத்தாலி, போர்த்துக்கல், சுலோவேனியா உருகுவே ஆகிய நாடுகளை இந்த 29 நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்கிவிடத்தீர்மானித்துள்ளது.

இப்புதிய முடிவிற்கும் தம் நாடு மீது நடத்தப்பட்ட தாக்குதலிற்கும் தொடர்பில்லை என அறிவித்துள்ள அமெரிக்க, இராஜாங்க அமைச்சு, சட்டவிரோதமாக குடியேறுபவர்களின் எண்ணிக்கையைகட்டுப்படுத்தவே இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறிவித்துள்ளது. (உ-2)

# துணைமேயர் தேர்தல் மூன்று இடங்களை தி.மு.க. கைப்பற்றியது

(சென்னை)
தமிழ்நாட்டிலுள்ள ஆறு மாநகர ஆட்சி மன்றங்களின் துணைமேயர் தேர்தல் முடிவடைந்துள்ளது.

கடந்த புதன் கூழப்பங்களுக்கு மத்தியில் அந்த அந்த இடங்களில் தேர்தல் நடைபெற்றன.

தி.மு.க. வைச்சேர்ந்த மூன்று துணைமேயர்களும் அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்த இரு துணைமேயர்களும்த.மா.கா.வைச்சேர்ந்த ஒருவரும்தெரிவுசெய்யப்பட்டுவிட்டனர். சென்னையிலும் சேலத்திலும் முறையே அ.இ.அ.தி.மு.க. வைச்சேர்ந்த கராட்டி தியாகராசனும், கவுண்டப்பனும்துணைமேயர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திருச்சியிலும் திருநெல்வேலியிலும் மதுரையிலும் தி.மு.க. வைச் சேர்ந்த அன்பழகனும் விஸ்வநாதனும் சின்ன சாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கோயம்புத்தூரில் துணை மேயராக த.மா.கா. ரகுபதி தெரிவானார். (து)

# இந்தியாவின் விடயத்தில் தலையிட எவரையும் அனுமதிக்க முடியாது

## பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

[புதுடில்லி]
இந்தியாவிற்கு எதிராகத் தூண்டி விடப்படும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடும் நடவடிக்கைகள்தொடருமென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இதேவேளைஎந்த ஒரு அந்நிய நாடும் தமது நாட்டு விடயத்தில் தலையிடவோ உத்தரவிடவோ அநுமதிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

வால்மீகி தினத்தையொட்டி நேற்று முன்தினம் தன்னைச் சந்தித்த வால்மீகி சமூகத்தினர் மத்தியில் உரையாற்றிய வாஜ்பாய் பாகிஸ்தான் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்றும் கூறினார்.

பயங்கரவாதம் கண் இல்லாதது என்று குறிப்பிட்ட வாஜ்பாய் இதற்குநாடுஇனம் என்ற வேறுபாடு இல்லாது பெண் ஆண் குழந்தைகள என்ற ரீதியில் இரத்தத்தைக் குடிக்கிறது என்றார். (து)

வினைபகை என்றிரண்டின்
எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத்தெறும்
குறள்

# வலம்புரி

## முக்கால உண்மை

18

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் எண்ணம் ஐ.தே கட்சிக்கோ, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ கிடையாது. என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்த கருத்து வெறுமனே வார்த்தை வடிவங்கள் மட்டுமல்ல. அது முக்காலத்து உண்மை இரண்டு பேரின வாதக் கட்சிகளும்நாட்டில்சாந்தி சமாதானம், ஏற்படுவதை விரும்பாதவை பிச்சை எடுப்பவன் தனது காலில் இருக்கும் புண் மாறுவதை விரும்பாததுபோல்பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சியும் நாட்டில் சாந்தி,சமாதானம் ஏற்படுவதை ஒரு போதும் விரும்பப் போவதில்லை மாறாக இனப் பிரச்சினையைத் தீர்ப்போம் எனக்கூறிக்கொண்டே தமது பதவிக் காலத்தை நகர்த்தவுள்ளனஇந்த உண்மையையே கலாநிதி விக்கிரம பாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை பற்றிய விடயத்தில் அன்று முதல் இன்று வரை தனது தெளிந்த கருத்தைவெளிப்படையாக முன்வைக்கின்ற சிங்கள அரசியல்வாதிகளில் விக்கிரமபாகு கருணாரட்ண முதன்மையானவர். வெறும் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக இனப் பிரச்சினையை மழுங்கடிக்கவோ அல்லது தமிழினத்திற்கு எதிராகக் கருத்து கூறவோ அவர் முனைந்தது கிடையாது. சிங்களப் பேரினவாதக் கட்சிகள் இரண்டும் இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை என்ற உண்மைக் கருத்தின் பார்வையை சற்று அகல விரித்தால்எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவை ஒரு போதும் தமிழ் மக்களுக்குஉரிமைகளை,அதிகாரங்களை வழங்கப் போவதில்லை.இதுசர்வநிச்சயம.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்று முதல் இன்று வரை பாராளுமன்றத்தில் உரத்துக் குரல்கொடுத்தார்கள் நடந்தது என்ன? யாழ்ப்பாணத்தில் எத்தனையோ அகிம்சை வழிப் போராட்டங்கள் நடத்தப்பட்டது கண்டமிச்சம்என்னஎன்று இப்படியே அடுக்கிக் கொண்டுபோகலாம்இதில் எவற்றாலும் தமிழ்மக்கள் அடிப்படை வசதிகளையோ, சுதந்திரத்தையோ அனுபவிக்க முடியாது. வைரத்தை வைரத்தால் வெட்டுவது போல் யுத்தத்தை யுத்தத்தால் மட்டுமே முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

---

திறனாய்வுக் களம்

# சுந்தரேசன் சிந்திய வைர முத்துக்கள் அடங்கிய "பாலையும், பயணமும்" என்ற கவிதை நூல்

சீனத்துக் கவிதைகளை சுந்தரத்தமிழில் முத்துக்களாகக் கோர்த்து தமிழ் உலகிற்குத் தந்தளமதுசாகித்தியமண்டல விருது பெற்ற கவிஞர் சுந்தரேசன் அவர்களின் மறறுமொரு படைப்பு கவிதைப் பிரியர்களின் கைகளில் மிக விரைவில் தவழப்போகின்றது என்பதைச் சொல்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன் தமிழ்க் கவிதைகள பற்றிய மேலான அறிவில் மிக்க ஆழமான விமர்சனப் பார்வையை செலுத்துவதற்கான அளவு கோல்கள் பற்றி அதிகளவு கற்றிருக்காவிட்டாலும், ஆங்கிலக் கவிஞர்களின கவிதைகளைக் கற்று, கற்பிக்கக் கேட்டு அதிலிருந்து வாழ்க்கை அனுபவம் பற்றிய சிதறல்களை உய்த்தறிந்தவன் என்றமுறையில் இந் நூல் பற்றிய என உள்ளத் தெளிவுகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

### பிறமொழிக் கவிதை ஈடுபாடு

மொத்தமாகப் பின்னப்பட்ட 34 கவிதைகளையும் தொகுத்துப் பார்க்கையில் எனக்குப் பிடித்த முதலாவது அம்சம், கவிஞரின் பரந்து, விரிந்த மொழியாள்கையும் அதன் பின்னால்இறுக்கமாகக் கோர்க்கப்பட்டுள்ள அவருடைய வாழ்க்கை, பற்றிய தெட்டத் தெளிவான புரிந்துணர்வுமாகும்; ஆயிரக்கணக்கான ஆங்கிலம் மற்றும் பிறமொழிக் கவிதைகளுடானஈடுபாடு, கவிஞரை தனக்கென ஓர் அடித்தளத்தை அமைத்து அதிலிருந்து தனது படிமானங்களை வழங்குவதற்கான ஓர் ஆற்றலை சீர் செய்துகொடுத்துள்ளது என்றால் மிகையாகாது. மொழியைக் குறுக்கி அதன் மூலம் ஓர் பரந்த செய்தியை, எண்ணத்தை முன் வைக்கும் திறன் பல கவிதைகளில் பரந்து, காணப்படுகின்றது. சுந்தரேசனின் சிலகவிதைகள் என்னை ஓர்ஆங்கிலக் கவிஞரின் கவிதை ஈடுபாட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் புகழ் பூத்த ஆங்கில இலக்கியத்தின் படைப்பாளிகளில்ஒருவாடீ எம். லோறன்ஸ் இவரை நாம் ஓர் சிறந்த நாவலாசிரியராகக் கண்டாலும், இவரது சில கவிதைகள், கவிதை ஆர்வலர்களைசுண்டி இழுத்து சிந்திக்கச் செய்பவை லோறன்ஸ்தனதுகவிதைகளில் தன்னைச் சூழ இருக்கும் பெரும்பாலான உயிரினங்களை விட்டு வைக்கவில்லை.

அவரது கவிதை உலகின் குறியீட்டுச் சின்னங்களாக சிறிய உயிரினங்களும் படர்ந்து காணப்படுமலர்களும்விளங்கின.

> பூமித்தாயின் பெருமூச்சினால்
> பாளம் பாளமாய்வெடித்து
> வரண்டு இறுகி

| | |
|---|---|
| நூல்: | பாலையும், பயணமும் |
| ஆசிரியர்: | வை. சுந்தரேசன்<br>ஆங்கிலத்துறை<br>யாழ். பல்கலைக்கழகம் |
| வெளியீடு: | பசுபதி சிவநாதன்<br>தலைவர், பொருளியல் துறை<br>யாழ். பல்கலைக் கழகம் |
| விலை; | ரூபா 100/- |

### தனித்துவமான கவிஞர்

பல தமிழ்க் கவிதைகளை வாசித்திருந்தும், முதல் தடவையாக சுந்தரேசனின் கவிதைகளில் மிகவும் பலமான முறையில் சொல்லப்பட்டுள்ள

## பரன்

குறியீட்டுச் செய்திகளைக் காணக் கூடியதாகவுள்ளது. இவ் ஆற்றல் இவரைமற்றைய கவிஞர்களிடமிருந்து வேறுபடுதத் தனித்துவமான கவிஞராகக் காண வழி செய்கின்றது எனது கூற்றை மேலும் தெளிவு படுத்தும் வகையில் அவரது இரண்டுகவிதைகளை உதாரணமாகத் தொடுகின்றேன். எனக்கு மிகவும்பிடித்த கவிதைகளில் 'பயணம், குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய மிக நல்ல கவிதையாக மிளிர்கின்றது

### குறியீட்டுக் கவிதை

இக் கவிதை வெறுமையின் உச்சியில், சகலத்தையும் இழந்து மீண்டும் ஊன்றி நிமிர்ந்து வாழ்க்கையின் எல்லைக் கோடுகளை தொட, வருட நினைக்கும் கசப்பான பயணங்களில் ஈடுபடும் மனிதக் கும்பல்களின் அவல நிலையைத துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது. ஆரம்பத்தில் இருந்துஇறுதிவரை இக்கவிதை ஓர் குறியீட்டுக் கவிதையாகக் காணப்படுகின்றது.

> சூரிய அக்கினிக்கம்பிகளாய்
> திசை எங்கும் தெறிக்கும்
> மூர்க்கமான சூரியக்கிரணங்கள்

> வெப்பத்தைக் கொப்புளிக்கும்
> விறைத்துப் போன தரை...

மொழியாள்கையூடாக கவிஞர் வெளிக்கொணரும் காட்சி குறியீட்டுத்தன்மைகளுடனும் சிறந்த உவமானங்களுடனும், தெட்டத் தெளிவாக கண் முன்விரிகின்றது. மிகச்சிறந்த வரிகளுடன் தான் சொல்லப் போகும் காட்சியை மிகவும் உணர்வு பூர்வமாக வெளிப் படுத்தும் தன்மையில் இவரது கவிதைகள் மிக உயர்ந்த இடத்தைப் பெறுகின்றன;

### வெடிப் பொலித் தன்மை

மீண்டுமொரு குறியீட்டுக் கவிதை 'வதை' மிகத்துல்லியமான வரிகளின் மூலம் நடக்கும் நிகழ்ச்சியை அற்புதமாகத் தருகின்றார் கவிஞர்.

> ஆருயிர் கவர்ந்திடும்
> அந்தகன் போல் ஒரு
> பாதகன் வந்தனன
> பந்தம் ஒன்று ஏந்தி
>
> சொந்தம் எம்மவை
> சூழ்ந்து கலைந்தன
> குஞ்சு குடம்பிகள்
> கூடடில் பொசுங்கின.

இக் கவிதையில் குறிப்பிடக் கூடிய நல்லதொரு அம்சம், வரிகளின் ஆரம்பத்தில் எழுப்பப்படும் ஓசை தமிழில் காணப்படும் வெடிப்பொலித் தன்மைக் ('P' ஒலி பாதகன், பந்தம் 'K' ஒலி குஞ்சு, குடம்பி, கூடு) மீண்டும் மீண்டும் ஒலித்து ஓர் வரண்ட, வெடித்துச் சிதறுகின்ற வாழ்க்கை அவலத்தை அற்புதமாக எடுத்தியம்புகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, இக்கவிதைத தொகுதியானது யாழ் மண்ணில் புதியதோர் கவிதைக்கலாசாரத்தை அறிமுகப் படுத்தப் போகின்றது என்றால் மிகையாகாது; போரின் அவலங்களையும், சமுதாயச் சீர்கேடுகளையும் அள்ளி எறிகின்ற கவிதை வரிகளிற்கு மத்தியில் சுந்தரேசன் தனது ஆழமான வைர முத்துக்கள் மூலம் புதியதோர் பாணியைத் தமக்கெனப் பெற்றுள்ளார் என்பது கண்கூடு.

### திருப்புமுறைக் கவிஞர்

மரபுக் கவிஞர்கள், புதுக் கவிதை விற்பனர்கள் என்ற வரம்புகளிற்குள் கவிஞர் சுந்தரேசனை வரையறை செய்வதிலும் பார்க்க, தமிழ் உலகிற்கு இவர் ஓர் பரிணாம வளர்ச்சி கவிஞராகவோ அல்லது ஓர் திருப்புமுறைக் கவிஞராகவோ மிளிர்கின்றார் என்றால் மிகையாகாது, ஏனெனில் இவர் தனது கவிதைகளிற்கு வரம்புகள் கட்டி தனது உணர்வுகள், சிந்தனைவளர்ச்சிகளை கட்டுப்படுத்தப் படுவதை விரும்பவில்லைப்போல் தெரிகின்றது. இவரது புதிய படைப்புக்கள் மேலும் மேலும் தமிழ்க் கவிதை வளர்ச்சிகு அணி செய்ய வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து எனது விமர்சன நோக்கை நிறைவு செய்கின்றேன். □

---

# இன்றும் நாளையும் வலிவடக்கில் கலாசார விழா

(ஏழாலை)

வலிகாமம வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் கலாசார விழா, வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் தலைமையில் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் முதல் நாள் விழாவில் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு, யாழ். பிரதேச செயலர் பா. செந்திலநந்தனன், வலிகாமம் வடக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர் தி. சிவகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-12)

# இன்று விசாரணை

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நாடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் இன்று பண்டாரவளை மாவட்ட நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பி. எச். குலதிலக தலைமையில் நடைபெறும் இவ்விசாரணையில் நான்கு முக்கிய சாட்சிகள் சாட்சியமளிக்கவுள்ளனர்; (உ-5)

# 15 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குக

(கொழும்புத்துறை)

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தையொட்டி, ஊனமுற்றோரிடையே பல போட்டிகளை நடத்த உத்தேசித்துளளதாக ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை யொட்டி சித்திரப் போட்டி, சுயமுயற்சிப் போட்டி முச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி போன்ற போட்டிகள் நடாத்தவுள்ளன.

பங்கு பற்ற விரும்புவோர் இம் மாதம் 15 ஆம திகதிக்கு முன் விண்ணபபிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுளளது.

(உ-223)

---

# தினசரி தியானம்
# மின் விளக்கு

> யானே பொய் என் நெஞ்சும் பொய்
> என் அன்பும் பொய்
> ஆனால் வினையேன் அழுதால்
> உன்னைப் பெறலாமே!

**மாணிக்கவாசகர்**

உன்னைச் சார்ந்திருப்பதாலேயே ஒண் பொருளே, நான் உயிர் தரித்திருக்கிறேன்.

இருட்டறையில் இருக்கும் மின்விளக்கு மற்றப் பொருள்களைப் போன்று மறைந்து கிடக்கிறது. ஆனால் அதனுள் மின்சக்தி வந்ததும் அது சுடர் விளக்கு ஆகிறது. ஜோதி சொரூபமாகி அது அறையில் உள்ள பொருள்களையெல்லாம் விளக்கிறது; அங்ஙனம் இறைவன் அருளால் ஜீவாத்மாக்கள் தங்களை உணர்கின்றனர்; ஏனைய பொருள்களையும் பார்க்கின்றனர்.

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்**

# தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு

# புலிகள்மீதுஉ ளப்பூர்வமானநம்பிக்கைஉ ண்டா?

## செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் டக்ளஸ்

(கொழும்பு)

பெரும்பான்மைப் பலம் எமக்கு கிடைத்தால் வரி, கப்பம் போன்ற அறவீடுகளுக்கு முடிவு கட்டுவோமென்று வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்:

நேற்று ஈ.பி.டி.பி யின் தேர்தல் விஞ்ஞாபனம்ஊடகவியலாளர் மத்தியில் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ் வைபவத்தின் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

மெல்லெனப் பாயும் நீர் கல்லையும் உருகப் பாயும் என்பார்கள் அதேபோலஎமது கட்சியின் செயற்பாடுகளும் மெதுவாகவும், நிதானமாகவும்மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாங்கள் தேர்தல்காலங்களில் மட்டும் சுறுசுறுப்பாக இயங்கிப்பின்னர் வேகம் குறைந்து போபவர்கள் அல்ல

எமது செயற்பாடுகள் எப்போதும் போலத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றதுஎன்றார்:

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது பல்வேறு ஊடகவியலாளர்களும் பல தரப்பட்ட கேள்விகளையும் எழுப்பினர் இக் கேள்விகளுக்கு செயலாளர் நாயகம் டக்ளஸ்பதிலளித்தார் அவற்றில் சில கேள்விகளும் பதில்களும் கீழே தரப்படுகிறது.

கேள்வி- தேர்தலில் உங்களுக்குப் போட்டியாளர்களாக விளங்கும் நான்குதமிழ்க்கட்சி கூட்டமைப்பு தங்களது ஒற்றுமை கண்டு நீங்கள் அச்சமடைதாகக்கூறுகிறார்களே அது பற்றிஎன்னநினைக்கிறீர்கள் ?

✶ இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளோடு எங்களுக்கு நீண்ட காலமாகவே கருத்துடன்பாடுகள் இல்லை ஏனெனில் அவர்களது சொற்களுக்கும் செயல்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி உண்டு. எமது செயற்பாடுகள் குறித்தும எமது அரசியல் இலக்குகள் குறித்தும், மக்கள் எம்மீது பெரும் நம்பிக்கைகொண்டுள்ளனர். எனவே கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகள் குறித்து அச்சம் எதுவும் எமக்கு இல்லை ஆனால் எமது சக்தியைக் கண்டு அஞ்சுவதனாலேயே அவர்கள் கூட்டுச் சேர்ந்துள்ளனர். என்பதே உண்மை.

கேள்வி - கடந்த ஒரு வருட காலமாக நீங்கள் அமைச்சர் பதவி வகித்து வருகின்றீர்கள் இந்த அனுபவம் குறித்து என்ன சொல்ல விழைகிறீர்கள் ?

★ நாங்கள் செய்வதற்கு திட்டமிட்டிருந்த பணிகளில் சுமார் நாற்பது சதவீதத்தை செய்துள்ளதாகக் கருதுகின்றேன் இந்த ஓராண்டிலும் மக்களின் மனங்களை வெல்லுதல் மக்களுக்கு எதிர்காலம் நம்பிக்கை ஊட்டுதல் மக்களின் பங்களிப்பைப் பெறுதல் என்பனவே எமது குறிக்கோளாக இருந்தது.

கேள்வி - பொதுத் தேர்தலில் ஐ.தே.க பதவிக்கு வந்தால் அப்போதும் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனம் பொருத்தமாக இருக்குமா ?

✶ இது எமது கட்சியின் எண்ணம்.எமது அரசியல் இலக்கு யார் பதவியில் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து இதில்மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது ஆனால் எமது இலக்குகளை எட்டுவதில் காலதாமதம் அல்லது அணுகு முறைகளில் சிலமாற்றம் நேரலாம் எனினும் அடிப்படை எண்ணம் மாறாது ஐ.தே.க பதவிக்கு வரும் நிலை ஏற்பட்டால் அப்போது அது பற்றி முடிவு செய்வோம் ஐக்கிய இலங்கைக்குள் சமாதானசகவாழ்வுகாண மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில்சுயாட்சி தேவை என்பது தான் எமது நிலைப்பாடு.

கேள்வி - புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன ?

★ புலிகளுடன் பேசுங்கள் என்று சிபாசுசெய்யப் போவதும் இல்லை பேசவேண்டாம் என்று தடைக்கல் போடப் போவதும்இல்லை. ஆனால் புலிகளுடன் தான் பேச போகிறோமெனச் சொல்லிக் கொண்டு இழுத் தடிப்பதோ எமக்கு உடன்பாடானதல்ல.

கேள்வி - புலிகளுடன் மட்டும் தான் பேசவேண்டும்என நான்கு கட்சிக் கூட்டமைப்பு கோருகிறதே ?

✶ யுத்தம் பற்றியும் போர் பற்றியும் புலிகளுடன் மட்டும் தான் பேச வேண்டுமானால் அதுசரியாக இருக்கலாம் ஆனால் இனப் பிரச்சனைக்கான தீர்வு பற்றிப் பேச வேண்டுமானால் எல்லாத் தரப்பினரோடும் தான் பேச வேண்டும். ஏனெனில் அதுமக்களின்ஜனநாயக உரிமை புலிகளோடுமட்டும்தான்பேச வேண்டும் என்பது தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுப்பதற்கு சமனானது.

மேலும் புலிகளுடன் பேசி விரைவில் தீர்வுகாண முடியுமெனின் எமக்கு அதில்ஆட்சேபனை இல்லை ஆனால் புலிகளின்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மக்களின் நலன்களை முன் நிறுத்திச் செயற்பட முன்வருவார் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை புலிகளுக்காக இன்று பரிந்து பேசும் இக் கூட்டமைப் பின் தலைவர்களுக்குக் கூட புலிகள் மீது உளப்பூர்வமான நம்பிக்கை இருக்குமா என்பது சந்தேகமே.

கேள்வி;- தேர்தல்முறைகேடுகள் இடம் பெறலாம் என்ற புகார்கள் முன் வைக்கப்படுகின்றமை பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

★ இது அரசியல் உள்நோக்கம் கொண்ட குற்றச் சாட்டு ஆனால் தேர்தல்களின் மீது நம்பிக்கை இல்லை என்றும் தேர்தல்களில் மக்களுக்கு ஆர்வம் இல்லை என்றும கூறிவந்தவர்கள் பலர் இப் போது தேர்தல்களில் போட்டியிட முன் வந்துள்ளனர் தேர்தல்களைப் பயன் படுத்த வேண்டுமென அக்கறை காட்டுகின்றனர் இது ஈ பி டி.பியினராகிய நாங்கள் வகுத்துள்ள பாதை சரியானது என்பதுக்குக் கிடைத்த அங்கீகாரம் ஆகும்

கேள்வி- கடந்த ஏழு வருடங்களாக அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் இழுத்தடித்து வருகிறதே அதுபற்றி என்ன சொல்லுவீர்கள்?

★ இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லையென் பது சரிதான். ஆனால் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொள்ளப்பட்டமுயற்சிகளின் போது தமிழர் தரப்பு பிரதிநிதிகளாக இருந்தவர்களின் ஒத்துழைப்பு எப்படி இருந்தது என்பதைப்பலரும் எண்ணிப் பார்ப்பதில்லை. உதாரணமாக இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு. ஒரு சாரார் அதனைத் தூக்கி எறிந்தனர் இன்னொரு சாரார் துஷ்பிரயோகம் செய்தனர். இதற்குப் பின்னர்பல சந்தர்ப்பங்கள் வந்தன: அண்மையில் கூட பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்குமுன்பாக சந்தர்ப்பம் இருந்தது. இவற்றைச் சரியாகப் பயன்படுத்தும் துணிவும், தூரப்பார்வையும் எம்மவர்களுக்கு இருக்க வேண்டும்; இருக்கிறவன் சரியாக இருந்தால் எல்லாம் சரியாக இருக்கும். நாங்கள் சரியாக இருக்காமல் கோணல் மாணலாக இருந்து கொண்டு மற்றவர்களைப் பிழை கூறுவதில் அர்த்தமில்லை.

கேள்வி-தற்சமயம் உங்களுடைய முக்கிய குறிக்கோள் என்ன?

★பொருளாதாரரீதியில் நலிவடைந்த மக்களுக்கு இயலுமான உதவிகளை வழங்கி அவர்களது வாழ்க்கையை மேம்படுத்துதல் முதலாவது இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களே தஞ்சமென்று வாழும் அகதிகளின் அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பது இரண்டாவது வரி என்றும்,கப்பம்என்றும் நன்கொடைஅறவீடுகள் என்றும் வாங்கும் அரசியல் போக்குகளுக்கு முடிவுகட்டுவது மூன்றாவது.

கேள்வி-புலிகள் தான் ஏகப் பிரதிநிதிகள் என்பது போல நான்கு கட்சி கூட்டமைப்பு கூறுகிறதே?

★அது அவர்களின் கருத்து மக்களின் கருத்து அதுவல்ல என்பதுவே எனது கருத்தென்று அமைச்சர் தேவானந்தா கூறினார். (இ)

### மேவின்சில்வா

அழுகிய தக்காளிப்பழத்தினால் எறிந்துள்ளனர்.

இதேவேளை மேவின்சில்வா ஏற்கனவே இரண்டு அத்துமீறல்சம்பவங்களில் ஈடுபட்டவர் என்பதும் பிரபல பத்திரிகை நிறுவனமொன்றை மிரட்டியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### குழந்தையை

தியசாலையில் ஆண்குழந்தையொன்றைப் பிரசவித்தார். அதேவேளை வைத்தியசாலையில் இன்னொரு பெண்ணுக்கும் ஆண் குழந்தையொன்று பிறந்தது.

இவ்விரு குழந்தைகளிலுமே ஆள் மாறாட்டம் இடம் பெற்றுவிட்டதென கரவெட்டியைச் சேர்ந்த பெற்றோர் புகார் செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பருத்தித்துறை பிரதேசசபை தலைவர், மற்றும் மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோருக்கு பெற்றோரால் முறைப்பாட்டுக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. [இ.23]

### தமிழ்க கட்சி

டத்தில் வன்னிமாவட்டத்தில் போட்டியிடும் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அறிமுகம செய்து வைக்கப்படுவர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.வினாயகமூர்த்தி, செயலாளர் கலாநிதி என். குமரகுருபரன், ஈ பி ஆர். எல். எவ். சுரேஷ்பிரேமச்சந்திரன் உட்பட பலர் கலந்துகொள்ள உள்ளனர்.

கூட்டமைபபின் காரியாலயம் ஒன்றும் அன்றையதினம் முன்னாள் எம்.பி செல்வம் அடைக்கலநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது. [ம]

### புலிகளுடன்

அவர்களுடன்பேச்சுவார்த்தை நடத்துவதற் குரியநிபந்தனைகள் தொடர்பாகவும் நாட்டு மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சிதெளிவுபடுத்தவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த ஜனாதிபதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் பொதுஜனஐக்கியமுன்னணி அரசே வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்றும் உறுதியாகக் கூறினார்.

மக்களின் ஆணைக்கு எதிராக ஐக்கியதேசியக்கட்சி செயற்பட்டபடியால் மக்கள் மற்றுமொரு தேர்தலுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. நாட்டின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியை இதற்குவீணாகச் செலவு செய்ய வேண்டியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுபதவிக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு திடமான கொள்கையுடன் செயற்பட்டு வருகிறது இக்கொள்கை அரசினால் தொடர்ந்தும் பின்பற்றப்படும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளுக்கு இன்னமும் கால அவகாசம் உண்டு. பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளை அரசாங்கம் திறந்தே வைத்துள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார். (வ)

### படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்படவட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித்தொடரில் JEANRENOIR இயக்கிய பிரெஞ்சு மொழித்திரைப்படமான IA-GRANDE-ILLUSION (THE GRAND ILLUSION) எனும் திரைப்படம் இன்று மு.ப. 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப் படவுள்ளது.

ஆர்வலர்கள்எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர். இரா. சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (உ-217)

### கண்காட்சி

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இன்று காலை 10 மணிக்கு தையல் கேக்ஐசிங் பூவேலை தலையலங்காரம் போன்ற கைப்பணிக்கலை பயிற்சியை முடித்த மாணவர்களின் கண்காட்சி இடம் பெறவுள்ளது.


உ
சிவமயம்

## இந்து சமயப் பேரவை
### யாழ்ப்பாணம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு நடாத்தப்படும் கவிமாமணி, கவிமணி விருதுகளுக்கான கவிதைப்போட்டி.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் **15-11-2001** நண்பகல் **12-00** மணிக்கு முன்னராக தமது விண்ணப்பங்களை நேரில் அல்லது தபால்மூலம் எமக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**விண்ணப்ப விபரம்**

முழுப்பெயர் : ------------ ------------
தே.அ.அ.இல ; -- ------ பிறந்த திகதி------
பால் ;------------ சமயம் ;------
தொழில்; ;------------

இப்போட்டியில் முன்னைய ஆக்கங்களுக்கு 50புள்ளியும் எழுத்துமூல போட்டிக்கு 50புள்ளியும் வழங்கப் படும்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி**

கௌரவ செயலாளர்
இந்துசமயப் பேரவை - யாழ்ப்பாணம்
கைதடி சைவச்சிறுவர் இல்லம்
ஏழாலை மேற்கு
ஏழாலை.

**அருட்கவி சீ. விநாசித்தம்பி** — தலைவர்
**சி. சக்திகிரீவன்** — கௌரவ செயலாளர்

[3911]



## கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் பிரபல நாதஸ்வர வித்துவான் எஸ். கே. இராமமூர்த்தியின் சிரேஷ்ட புதல்வன்

நாதஸ்வர வித்துவான்

**கே. ஆர். சிவசுப்பிரமணியம்**

(பெரியதம்பி)

அவர்களின் மறைவு கலை உலகிற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம.

கோண்டாவில் மேற்கு,
மக்கள்.

கோண்டாவில்; (கி 2812)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இலஓ 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.